[2010 மார்ச் 26

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) சட்டத்தின்கீழ் (தமிழ்நாடு சட்டம் 60/2008) குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக்காக 2–11–2009 ஆம் நாள் வரை மனுச் செய்யலாம் என அறிவித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (டி1) துறையின் 3–8–2009 ஆம் நாளிட்ட 105 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைத் தொகைகளைக் கொடுத்துத் தீர்த்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 60/2008) 15 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2. 8–8–2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்–II–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(1)/ வ.வ.ப./52(அ)/2007 ஆம் எண் அறிவிக்கைக்கு வேறுபாடுகளைச் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 12–10–2009 ஆம் நாளிட்ட 149 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

3. மதுரை, திருவாளர்கள் உடல்திறன் குன்றியோருக்கான ஹெலன் கெல்லர் சர்வீஸ் சொசைட்டி கடித உறை தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் காகிதம், பசை போன்ற மூலப்பொருட்களின் கொள்முதல்மீது செலுத்த வேண்டிய வரிக்கு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 20–10–2009 ஆம் நாளிட்ட 153 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

4. யாதொரு வணிகர், முதலாம் விவர அட்டவணையின் பதிவின்கீழ் வருகிற திரைப்படம் சார்ந்த சாதனங்களைப் பயன்படுத்தும் உரிமை, படப்பிடிப்பு அரங்குகள், ஆய்வுக் கூடங்கள், ஒலிப்பதிவு அரங்குகள் ஆகியவற்றில் திரைப்படத் தயாரிப்புச் சாதனங்கள் மற்றும் ஒலி, ஒளி, செயற்கைக்கோள் உரிமைகள் ஆகியவற்றைக் குத்தகைக்கு விடுவது குறித்து செலுத்த வேண்டிய

2010 மார்ச் 26]

வரியிலிருந்து 29–9–2007 முதல் 28–9–2010 வரை விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 3–11–2009 ஆம் நாளிட்ட 157 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

5. யாதொரு வணிகர், பட்டாணி மற்றும் பட்டாணிப் பருப்பு விற்பனைமீது செலுத்தத்தக்க உபரி வரி, கூடுதல் உபரி வரி மற்றும் கூடுதல் வரித் தொகையை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறையின் 1–9–2009 ஆம் நாளிட்ட (2டி) 182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

6. திருநெல்வேலி கோட்டத்திலுள்ள 12 இரப்பர் விற்பனையாளர்கள், சுத்தம் செய்யப்படாத இரப்பர் தாள் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி, கூடுதல் வரி, மேல் வரி மற்றும் தண்டத் தொகையை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறையின் 15–9–2009 ஆம் நாளிட்ட (2டி) 186 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. அரசு இரப்பர் கார்ப்பரேஷன் பதனிடப்படாத இரப்பர் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி, உபரி வரி, கூடுதல் வரி மற்றும் தண்டத் தொகையை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்தும் மற்றும் சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் டெட்ரா பேக் பால் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி, உபரி வரி மற்றும் கூடுதல் வரித் தொகையை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு தள்ளுபடி செய்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவுத் (டி2) துறையின் 16–9–2009 ஆம் நாளிட்ட (2டி) 187 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. சென்னை-6, அலுவலக தானியங்கு முறைப் பிரிவு, திருவாளர்கள் ஹெச்.சி.எல். இன்ஃபோ சிஸ்டம் நிறுவனத்தால் சென்னை, தரமணி, எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்திற்கு விற்பனை செய்ய இருக்கும் வண்ணப்படச் சுருள் பகுப்பாய்வுக் கருவி, டேப் பஞ்சிங் கருவி, ஆகியவற்றின்மீது செலுத்தத்தக்க அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 13–10–2009 ஆம் நாளிட்ட 150 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. நவி மும்பை, திருவாளர்கள் காட்டன் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தால் தமிழ்நாட்டில் கிடங்கு விற்பனைக்காக, ஏனைய மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட பஞ்சுப் பொதிகளின் விற்பனைமீது செலுத்தத்தக்க மதிப்புக் கூட்டு வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 22-12-2009 ஆம் நாளிட்ட 179 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. வத்தலகுண்டில் அமைந்துள்ள திருவாளர்கள் லியோனார்டு மருத்துவமனை அவர்களுடைய மருந்தகத்தில் விற்பனை செய்கின்ற மருந்துப் பொருட்களின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் 24–12–2009 ஆம் நாளிட்ட 181 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு அமைச்சர்கள் பயணப்படி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து பொது (நிருவாகம்-1 மற்றும் சட்டமன்றம்) துறையின் 31–12–2009 ஆம் நாளிட்ட 1292 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]